**THE LABOUR COURT, SALEM**
**C.P.No.142 Of 2018**

**12.08.2024**

**RW1 – திரு. நடராஜன்**

குறுக்கு விசாரணை – (மனுதாரர் தரப்பில்)

என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் என்ன பணியில் இருக்கிறேன் என குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் எதிர்மனுதாரர் சங்கத்தில் தலைவராக இல்லை. நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நிர்வாகம் அதிகாரக்கடிதம் கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை. மனுதாரர் கோரிக்கை மனுவில் எத்தனை தலைப்பில், எவ்வளவு தொகை கோரியுள்ளார் என்று ஞாபகம் இல்லை. நிர்வாகம் தாக்கல் செய்துள்ள பதிலுரையை படித்துப்பார்த்தேனா என்றால் பார்த்தேன். பதிலுரையில் 4ம் பத்தியில் மனுதாரர் விற்பனையாளராக பணிபுரிந்த காலம் பற்றிய விபரம் நிரப்பப்படாமல் உள்ளது என்றால் சரிதான். பதிலுரை பத்தி 6ல் மனுதாரர் தகவல் இல்லாமல் பணியிலிருந்து விலகிவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எதுவும் பதிலுரையில் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 39 ஆவணங்கள் பற்றி பதிலுரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு கொடுக்கவேண்டிய தொகை குறித்த கணக்குப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள 39 ஆவணங்களில் ஒவ்வொரு தலைப்பிற்கும் தனியாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம். மனுதாரரின் பணிப்பதிவேடு தாக்கல் செய்யவில்லை என்றால் முழுப்பணிப்பதிவேடும் தாக்கல் செய்யவில்லை. தேவையான விபரங்களை ஆவண எண்.23ல் கொடுத்துள்ளோம். எங்கள் சங்கத்தில் ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவுத்துறையில் தணிக்கை செய்கிறார்கள் என்றால் சரிதான். அந்த அறிக்கையில் சங்கம் கொடுபடவேண்டிய விபரம் மற்றும் வரவேண்டிய விபரம்

இருக்கும் என்றால் சரிதான். சங்கத்தின் எந்த ஒரு ஆண்டின் தணிக்கை அறிக்கையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. மனுதாரருக்கு கொடுபடவேண்டிய தொகைகள் என்று தாக்கல் செய்துள்ள ஆவண எண்.23 லிருந்து 37 வரையான ஆவணங்கள் எதுவுமே முழுமையாகவும், முறையாகவும் உள்ள ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதுவுமே கூட்டுறவு சங்க சட்டம் மற்றும் விதிகள் படி சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கு சாட்சிய வலிமை இல்லை என்றால் சரியல்ல. மும்முடி நியாயவிலைக்கடையில் முறைகேடு நடந்துள்ளதாக முதன்முதலில் மனுதாரர்தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மும்முடி நியாயவிலைக்கடையில் நடந்த முறைகேடு குறித்த குற்ற வழக்கு என்ன ஆயிற்று என்று தெரியுமா என்றால் தெரியும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மனுதாரர் சங்கத்திற்கு நிலுவை தொகை செலுத்த வேண்டியுள்ளது என்று சங்கம் தாவா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

கூட்டுறவு சங்க சட்டங்கள் பிரிவு 87 ன் கீழ் மனுதாரர் மீது தண்டத்தீர்வை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மனுதாரரின் கோரிக்கை என்னவென்றே புரிந்து கொள்ளாமலும், உரிய அதிகாரம் இல்லாமலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் மனுவில் கோரியுள்ள தொகை மற்றும் வட்டியுடன் கொடுக்க எதிர்மனுதாரர் சங்கம் கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/ (M. Shanthi )
Presiding Officer,
Labour Court, Salem.